# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1547 - 2008 අප්‍රේල් 25 වැනි සිකුරාදා - 2008.04.25

*1547 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 410 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 411 |


***கவனிக்க.-*** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2004, ஏப்பிறல் - யூன் வரையான காலாண்டு புத்தகப்பட்டியலொன்றும், பகுதி VI இல் மருத்துவ, பல் மருத்துவ மற்றும் சத்திர சிசிக்சை தொழிலர்களின் பெயர்ப்பட்டியலொன்றும் ஆங்கில மொழியில் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 02 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஏப்பிறல் 18 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக. பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதார்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் காரியாலயம், பிரதேச செயலாளர் காரியாலயம், கிராம அலுவலர் காரியாலயம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, மே மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் காரியாலயம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11.
2008, ஏப்பிறல் 3.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | கொபேய்கனே | பலதொற கொறளை பிரிவின் பிறப்பு/ இறப்பு மற்றும் தேவமதி கத்பத்துவ பிரிவின் விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் குருநாகல் |
| குருநாகல் | அம்பன்பொல | கந்திக கோறளை அம்பன்பொல பிரிவின் பிறப்பு இறப்பு மற்றும் வன்னிகத்பத்துவ பிரிவின் விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் குருநாகல் |
| குருநாகல் | நாரம்மல | தம்பதெணி உடுகக மேற்கு பிரிவின் பிறப்பு இறப்பு மற்றும் தம்பதெணி கத்பத்துவ பிரிவின் விவாக (கண்டி/ பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் குருநாகல் |
| குருநாகல் | குளியாப்பிட்டி (மேற்கு) | மயூராவதி கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கடுகம்பல கத்பத்துவ பிரிவின் விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் குருநாகல் |
| குருநாகல் | அம்பன்பொல | கந்திக கோறளை கிரிமெட்டியாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வன்னிகத்பத்துவ பிரிவின் விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் குருநாகல் |

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வாழ்தொழில் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி அமைச்சு**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

**எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவகம்**
**(முன்னைய தொழிநுட்பவலர்ப் பயிற்சி நிறுவகம்) - கட்டுநாயக்கா**

***எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (N.D.E.S) எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்த்தல் - குழு, 2008***

கட்டுநாயக்கா எந்திரவியற் தொழிநுட்பவியல் பயிற்சி நிறுவகத்தில் (முன்னைய தொழிநுட்பவலர்ப் பயிற்சி நிறுவகம்) மேற்படி பாடநெறிக் கற்கை தொடர்பான 2008 இன் குழுவுக்காக எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **அனுமதிக்கான கல்வித் தகைமைகள்**.- கீழ்க்குறிப்பிட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் ஆவர் :

1.1 ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், மொழி ஆகியவற்றில் குறைந்தளவில் 3 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி.

அத்துடன்

1.2 (அ) க. பொ. த. (உ.த) (புதிய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தி.

2. **வயது** : 2008, திசெம்பர் 1 ஆந் திகதியின்று 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல்.

3. **காலமும் பாடநெறியின் அட்டவணையும்**.- கீழே குறிப்பிட்ட வாறு, 73 வார (அண்ணளவாக) போதனைத் திட்டத்தையும் 135 வார (அண்ணளவாக) கைத்தொழில் பயிற்சியையும் கொண்ட நான்கு வருடத்திற்குரிய இரட்டைமுறை பாடநெறியாகும்.

| | |
|---|---|
| எந். தொ. நிறு. இல் அடிப்படைப் போதனைத் திட்டம் (செறிவான ஆங்கிலம் உட்பட) | - 27 வாரங்கள் |
| கைத்தொழிலான அடிப்படைக் கைத்தொழில் பயிற்சி | - 39 வாரங்கள் |
| எந். தொ. நிறு. இல் பொது போதனைத் திட்டம் | - 23 வாரங்கள் |
| கைத்தொழிலான பொது கைத்தொழில் பயிற்சி | - 52 வாரங்கள் |
| எந். தொ. நிறு. இல் சிறப்புப் போதனைத் திட்டம் | - 23 வாரங்கள் |
| கைத்தொழிலான சிறப்புக் கைத்தொழிற் பயிற்சி | - 44 வாரங்கள் |

போதனைத் திட்டங்கள் தொழில்நுட்பவலர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கோட்பாடு போதனையையும் பாடநெறி வேலைப் பயிற்சியையும் உள்ளடக்குகின்றன.

கைத்தொழில் பயிற்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் தாபனங்களில் நடாத்தப்படுகின்றன.

4. இந்த எந்.தொ. நிறுவகத்தில் நடாத்தப்படும் பாடநெறிகள் கீழே தரப்பட்டுள்ளன :-

(அ) குடிசார் எந்திரவியற் பிரிவு :
- (1) கட்டட அமைப்பு எந்திரவியல்
- (2) பெருந்தெருக்கள் புகையிரத பாதை எந்திரவியல்
- (3) நீர் சுற்றாடல் எந்திரவியல்

(ஆ) மின் எந்திரவியற் பிரிவு :
- (4) இலத்திரனியல் எந்திரவியல்
- (5) மின்வலு எந்திரவியல்
- (6) தொலைத் தொடர்பு எந்திரவியல்

(இ) பொறிமுறை எந்திரவியற் பிரிவு :
- (7) பொறிமுறை தன்னசைவு எந்திரவியல்
- (8) பொறிமுறை (பொது) எந்திரவியல்
- (9) ஆழி எந்திரவியல்

(ஈ) கணனி எந்திரவியற் பிரிவு :
- (10) கணனி மென்பொருள் எந்திரவியல்
- (11) கணனி வன் பொருட் வலைதொழிற்பாட்டு எந்திர வியல்

(அ) இந்த எந். தொழி. நிறுவகத்தில் ஆழி எந்திர வியல் பிரிவின் (இல. 9) தரத்தன்மை முகாமைத்துவ முறை ஐ. எஸ். ஓ. 9001-2000 இன் அவசியபாடுகளுக்கு அமைவானதாகும்.

(ஆ) ஆழி எந்திரவியல் பாடநெறி தொடர்பாக, இந் நிறுவனம் STCW, 95 வுடனும் இதன் திருத்தங்களுடனும் மற்றும் சர்வதேச ஆழி அமைப்பின் (ஐ.எம்.ஓ.) நிறைவேற்றத்தின் மாதிரி நெறியான 7.04 வுடனும் தொடர்பான இயங்கு மட்டத்திலான ஆழி எந்திரவியலின் பொறுப்பாணை, அறிவு விளங்கல், திறன் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில், கல்வி போதனைகளையும் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சி முறைகளையும் அளிக்கிறது.

5. **போதனா மொழி** : ஆங்கிலம்

6. தொழிற் பயில்நிலை ஒப்பந்தம் :

6.1 பயிற்சி தாபனத்திற்கும் பயிலுநருக்கும் இடையே பரஸ்பர கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும், பயிற்சியளிக்கும் தாபனத்துடனான ஒப்பந்தமொன்றுக்குள் தெரிவுசெய்யப் படும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உட்படுத்தப்படுவார். பாடநெறி பூர்த்தியின் போது மீளளிக்கப்படக்கூடிய 5000 ரூபாவை பதிவின் போது, பயிலுநர் வைப்பாக்கல் வேண் டும். (பாடநெறியை இடைநடுவில் விட்டுச் செல்வோருக்கு இவ்வைப்பு மீளளிக்கப்படமாட்டாது.)

6.2 கைத்தொழிற் பயிற்சி விடயத்தில், பயிலுநர் தாபனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

6.3 பயிற்சி பூர்த்தியில் தொழில் வழங்கப்படுவதற்கான உத்தரவாதமேதுவுமில்லை.

6.4 பாடநெறிக்கு பயிலுநரொருவர் பதியப்பட்டு பாடநெறி முடிவுறும் வரை ஆகக்குறைந்தது 80% வரவு தேவைப் பாடாகும். மேற்படி தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாத மாணவர் பரீட்சைக்குத் தோற்ற முடியாததுடன் அவர் ஆட்சேர்க்கப்பட்ட குழுவில் இருந்து கல்வியை தொடர முடியாததுடன் அதற்கு பின்வரும் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

7. **சான்றிதழ் வழங்கல்**.- இப் பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்வோருக்கு எந்திரவியல் விஞ்ஞானத்திலான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

8. **தெரிவுசெய்யும் பிரமாணங்கள்** :

8.1 மேலே பந்தி 1 இல் தரப்பட்டுள்ள மிகக்குறைந்த அனுமதித் தகைமைகளையும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையறையுமுடைய எல்லா விண்ணப்பதாரிகளும் தகுதியுடையோர் ஆவர். தெரிவுகள் கீழே தரப்பட்டுள்ள முறையில் நடைபெறும்.

8.2 8.1 இன்படி தகைமையான தேர்வுநாடிகள் ஆங்கில மொழி மூலமான உளச்சார்புச் சோதனைக்கான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். (தகைமையான தேர்வு நாடிகளுக்கு முன் கூட்டி அறிவிக்கப்படும்)

8.3 விருப்பத் துறை சிறப்பாக்கம் மற்றும் உளச்சார்பு சோதனையில் சித்திநிலை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்ட துறைகளுக்கும் சிறப்பாக்கங்களுக்கும் விண்ணப்பதாரியை தெரிவு செய்வதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

8.4 ஆழி எந்திரவியலுக்குத் தெரிவு செய்யப்பட்டடோர் பதிவாக்கலுக்கு முன் தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள்** :

9.1 விண்ணப்பங்களையும் மேலதிக தகவல்களையும் N. D. E. S. இணைய தளத்திலிருந்து (www.iet.edu.lk) பெற்றுக்கொள்ளலாம்.

9.2 விண்ணப்பப்படிவங்களை 2008, யூன் 16 ஆந் திகதி வரை ரூபா 50 செலுத்தி கட்டுநாயக்க, டெம்பல் வீதியிலுள்ள எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவனத்தின் பதிவாளரிடமிருந்தும் ரூபா 50 க்கான காசுக்கட்டளையை சுய முகவரியிட்ட முத்திரையுடனான 9" x 4" அளவிலான கடித உறையுடன் "பதிவாளர், எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவகம், டெம்பல் வீதி, கட்டுநாயக்க" என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம் (011-2252833, 011-2252834)

9.3 மேலும் 2008, யூன் 16 ஆந் திகதிவரை ரூபா 50 பணமாகச் செலுத்துவதன் மூலம் பின்வரும் அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(1) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, 971, ஸ்ரீயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரிய,
தொலைபேசி இல. 011-2863680, 011-2867435

(2) தொழிற்பயில்நிலைப் பயிற்சி நிறுவகம், இல. 581, காலி வீதி, கட்டுபெத்தை, மொறட்டுவை.
தொலைபேசி இல. 011-2647393, 011-2641092

(3) தன்னசைவுள்ள எந்திரவியல் பயிற்சி நிறுவகம், இல. 7, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டியா.
தொலைபேசி இல. 011-2572977, 011-2532182

(4) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, ஊவா மாகாணம், 288, குமாரசிங்க மாவத்தை, பசறை வீதி, பதுளை.
தொலைபேசி இல. 055-2222608

(5) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, சப்பிரகமுவ மாகாணம், புதிய கொழும்பு வீதி, பாடசாலை ஒழுங்கை, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி இல. 045-2228667

(6) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, தென் மாகாணம், இல. 27A, திறந்த பல்கலைக்கழக வீதி, நூப்பே, மாத்தறை.
தொலைபேசி இல. 041-2226958

(7) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை,மத்திய மாகாணம், இல. 108/2B, திவங்க போதி மாவத்தை, முல்கம்பளை, கண்டி.
தொலைபேசி இல. 081-2201918

(8) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, வடமத்திய மாகாணம், 2 ஆம் குறிச்சி, 522/2, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
தொலைபேசி இல. 025-2225504

(9) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, வடமேல் மாகாணம், (தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு அருகில்), மல்கடுவாவ, நீர்கொழும்பு வீதி, குருநாகல்.
தொலைபேசி இல. 037-2221865

(10) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, வட மாகாணம், 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2222383

(11) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, கிழக்கு மாகாணம், இல. 7, ஜீ. எஸ். ஒழுங்கை, கல்முனைகுடி-13, கல்முனை.
தொலைபேசி இல. 067-2229357

(12) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மேல் மாகாணம், 242, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
தொலைபேசி இல. 011-2597671-2, 011-2587258

9.4 மேற்கூறிய நிறுவகங்களில் இருந்து விண்ணப்பங்களைப் பெறும் விண்ணப்பதாரிகள், கீழே 9.5 இல் விவரித்தபடி யாதேனும் மக்கள் வங்கிக் கிளையில் 300 ரூபாவைச் செலுத்தல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் பொழுது வங்கிக் கொடுப்பனவுச் சிட்டை (Bank paying slip) விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். இணையத் தளத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் 9.6 இன் விபரப்படி ரூபா 250 செலுத்தல் வேண்டும்.

9.5 கொடுப்புத் துண்டு (Pay in slip) கீழ்வருவனவற்றைச் சேர்த்து சரியாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(1) கிளைக் குறியீடு, கணக்கு இலக்கம் : 174-100170347379

(2) வரவாக்கல் அறிவுறுத்தல் : தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபை, நுகேகொடை, மக்கள் வங்கியிலுள்ள 174-100170347379 இலக்க சேகரிப்புக் கணக்கின் வரவுக்கு .

(3) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்.

9.6 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் வங்கியின் தகவுடைய அலுவலரால் கையொப்பமிடப்பட்ட கொடுப்புத் துண்டோடு இணைக்கப்பட்ட படிவத்தையும் பதிவுத் தபாலில் "பணிப்பாளர்/அதிபர், எந்திரவியல் தொழிநுட்பவியல் நிறுவகம், டெம்பல் வீதி, கட்டுநாயக்கா" என்னும் முகவரிக்கு 2008, யூன் 20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் எற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9.7 அரசாங்க தொழிநுட்ப கல்லூரியில் பல்கலைக்கழகங்களில் டிப்ளோமா பாடநெறியினை அல்லது பட்டப் படிப்பினை முழு நேரமாக மேற்கொள்வோர் அல்லது மேற்கொண்டோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர் ஆவர்.

9.8 விண்ணப்பத்துடன் சான்றிதழ்களையோ அவற்றின் பிரதிகளையோ அனுப்பலாகாது.

9.9 விண்ணப்பத்தினைப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

9.10 மேற்படி பந்தி 9.2 தொடர்பான காசுக்கட்டளை "கணக்காளர், எந்திரவியல் தொழிநுட்பவியல் நிறுவகம்" என்பவருக்கு கட்டுநாயக்கா அஞ்சலகத்தில் மாற்றக்கூடியதாய் எழுதப்படல் வேண்டும்.

10. விண்ணப்பத்திற்கு அஞ்சலில் ஏற்படக்கூடிய தாமதம் அல்லது தொலைந்து போதலுக்கு எந்திரவியல் தொழிநுட்பவியல் நிறுவகம் பொறுப்பேற்காது. எனவே, முன்கூட்டியே விண்ணப்பத்தை அஞ்சலிடவும்.

தலைவர்.

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.

4-612

---

## தொழில்நுட்பவியல் நிறுவனம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி – 2008/2009

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவுசெய்வதற்காக தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கைநெறியானது, தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கான புதிய கட்டிட நிலையங்களில் நடத்தும்வரை, மொறட்டுவைப் பல்கலைக்கழகக் கட்டிட நிலையங்களிலேயே நடாத்தப்படும்.

1. **பொது**.- இரண்டு வருடப் படிப்பையும், ஒரு வருட தொழிற்பயிற்சியையும் உள்ளடக்கிய இத்தொழில்நுட்பவியற் தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றது. பின்வரும் கற்கைத்துறைகளில் கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றது :-

(i) இரசாயன எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) குடிசார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) மின்சார எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iv) இலத்திரன் தொலைத்தொடர்பு எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(v) கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(vi) பொறிமுறை எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(vii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் ;
(viii) பல்பகுதிய தொழில்நுட்பவியல் ;
(ix) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பவியல்.

2. **தகைமைகள்** :

2.1 **வயது**.- (a) விண்ணப்பதாரிகள், 31.12.2007 ஆந் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(b) 31.12.2007 இல் 20 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரர்களுக்கு கப்பற்றுறைக் கல்வித் தொழில்நுட்வியல், கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல், பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(c) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள முழுநேர கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தேசிய தொழில்நுட்பவியலுக்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 **கல்வித் தகைமை**.- விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றிற்கு (03) குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) இணைந்த கணிதம்
(ii) உயர் கணிதம்
(iii) பௌதிகவியல்
(iv) இரசாயனவியல்

இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2005 அல்லது 2006 அல்லது 2007 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. தெரிவுசெய்வதற்கான தகைமைகள் :

3.1 **கற்கைக்கான அனுமதி**.- அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பெற்ற பெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் இயல்புத் திறமைப் பரீட்சையில் சித்தியடைவதிலும் தங்கியிருக்கும். இயல்புத் திறமைப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர். அதாவது இசற் மதிப்பீட்டு முறை (Z-Score) என்பதை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்படுவர். 40% திறமையின் அடிப்படையிலும் 60% மாவட்ட ஒதுக்கீடு அடிப்படையிலும் தெரிவு நடைபெறும்.

*3.2* ***கற்கைத் துறை.***- கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்கையில், இயல்புத் திறமைப் பரீட்சைப் புள்ளியையும், தந்துள்ள கற்கைத்துறை விருப்பு வரிசையையும் சேர்த்துக் கருத்திற்கொள்ளப்படும்.

*4.* **விண்ணப்பிக்கும் முறை :**

*4.1* (i) *விண்ணப்பப்படிவம் :*
விண்ணப்பப்படிவத்தினையும், தகவல்களையும் அரச வர்த்தமானியில் அல்லது பின்வரும் இணைய முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

http://www.mrt.ac.lk/itum

(ii) விண்ணப்பப்படிவமானது, கடித உறையின் இடது மேல் மூலையில் ''NDT Admission 2008/2009'' எனக் குறிக்கப்பட்டு, ''பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுப்பெத்த, மொறட்டுவை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப் பதிவாளர் தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) இரண்டு 9" x 4" முத்திரை ஒட்டிய கடித உறையில், உங்களது விலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப் பப்படிவத்தில் 6:7:8 இனைப் பார்க்க.)

*4.2* *நெறிக்கான முன்னுரிமை :*

(i) இரண்டு வகையான நெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கப்பற்றுறைசார் கற்கை நெறிக்கோ (வகை 1) அல்லது ஏனைய கற்கை நெறிக்கோ (வகை 2) அல்லது இரண்டிற்குமோ விண்ணப்பிக்கலாம். இரண்டிற்கும் விண்ணப்பிக்கு மிடத்து உங்கள் விருப்பு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) வகை (1) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கப்பற்றுறை சார் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.

(iv) வகை (2) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1, 2, 3, 4, 5, 6, 7) என குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்.**- ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும், ஏதாவதொரு வகைக்கான கற்கைநெறிக்கு ரூ. 200 (இருநூறு ரூபா) உம் (வகை ஒன்றுக்கான கப்பற்றுறைக்கும், வகை இரண்டுக்கான ஏனைய துறைகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 400 உம்) தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி, கட்டுபெத்தை கிளையில் உள்ள கணக்கு இல. 0000308280 க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) *விண்ணப்ப முடிவுத் திகதி.*- விண்ணப்ப முடிவுத் திகதி 2008, மே மாதம் 26 ஆந் திகதியாகும். (26.05.2008)

*6.* **இயல்புத் திறமைப் பரீட்சை.**- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரி களே இயல்புத் திறமைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்.

7. **பதிவு செய்தல்.**- (i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

* க. பொ. த. (உ. த.) சான்றிதழ் ;
* க. பொ. த. (உ. த.) இசற் மதிப்பீடு (Z Score) ;
* பாடசாலை விலகற் சான்றிதழ் ;
* பிறப்புச் சான்றிதழ் பத்திரம்/சான்றிதழ்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின், சத்தியக்கூற்று இணைக்கப்பட வேண்டும்.

*8.* **கவனிக்க.**- (i) ஒரு பரீட்சார்த்தி தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவுசெய்யப்பட்டதும் அக்கற்கைநெறிக் காலத்தின்போது இந்த பல்கலைக்கழகத்திலோ இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ் வரும் எந்த ஒரு நிறுவனத்திலோ வேறு எந்த கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.

(ii) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள முழுநேர மாணவர்கள் தேசிய தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கவோ பதிவுசெய்துகொள்ளவோ தகுதியற்றவர்கள் ஆவர்.

பணிப்பாளர்.

தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
*2008.04.11.*

| *For office use only* | |
|---|---|
| Application No. | District |
| | |

SPECIMEN APPLICATION FORM

Application For Admission to the National Diploma in Technology Course – Academic Year 2008/2009

INSTITUTE OF TECHNOLOGY, UNIVERSITY OF MORATUWA

Application For

(a) Maritime Fields (SET 1) [ ] Please tick (√) One or Both
(b) Other Fields (SET 2) [ ]

(All cages must be completed in **English BLOCK CAPITALS** only)

01. Name with Initials :

02. Contact Address : ..............................................................
..............................................................
Telephone No. .....................................
(Please enclose two self-addressed
9" x 4" Stamped envelopes)

| 03. Date of Birth : | | | 04. Sex : | Please tick ( ✓ ) |
|---|---|---|---|---|
| Year | Month | Date | Male | Female |
| | | | | |
| Age as at 31.12.2007 | | | | |
| YY | MM | DD | | |
| | | | | |

| 05. National Identity Card No. | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

06. Results of G. C. E (Advanced Level) Examinations :

| *Subjects & Details of Examination* | *Grades & Details obtained at the* | | |
|---|---|---|---|
| | *1st attempt Year : 2005* | *2nd attempt Year : 2006* | *3rd attempt Year : 2007* |
| Physics | | | |
| Chemistry | | | |
| Combined Mathematics | | | |
| Advanced Mathematics | | | |
| Index No. | | | |
| Medium (Sinhala or Tamil) | | | |
| Z-Score | | | |

| Results of year to be considered for Selection (indicate whether) 2005 or 2006 or 2007 | |
|---|---|

07. School(s) attended from Year 11 to 13

| *Year* | *Name & Address of School* | *Administrative District* | *Period of Attendance* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *From* | | | *To* | | |
| | | | *Y* | *M* | *D* | *Y* | *M* | *D* |
| 11 | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| 1st Attempt | | | | | | | | |
| 2nd Attempt | | | | | | | | |
| 3rd Attempt | | | | | | | | |

08. Certification of Results and School attended :

It is compulsory to certify the Results under No. 06 and Details under No. 07 in the application by the School Principal for the School Candidates, and by a Justice of Peace for External Candidates.

I certify that the particulars given above by the candidate in the cage 6 and 7 are true and accurate according to their Original Certificates.

Name of the Principal/Justice of the peace : Rev./Dr./Mr./Mrs. ..................................................................................

| Official Stamp |
|---|

......................., .....................
Signature Date

09. Field Preference : (*See Instruction)

| *Set 1* | | *Set 2* | |
|---|---|---|---|
| *Maritime Fields* | *Prefer.* | *Other Fields* | *Prefer.* |
| Marine Engineering Technology | | Chemical Engineering Technology | |
| Nautical Studies and Technology | | Civil Engineering Technology | |
| | | Electrical Engineering Technology | |
| (Special Medical Test and Interview for SET 1) | | Electronics & Telecom Eng. Technology | |
| | | Mechanical Engineering Technology | |
| State Priority, if applied for both sets | SET 1 | Polymer Technology) | |
| | SET 2 | Textile & Clothing Technology | |

Please tick (✓ )

10. Are you registered as a fulltime student in any other University under the UGC (other than Open University) or any Higher Educational Institution under the Ministry of Higher Education ?

| Yes | No. |
|---|---|
| | |

11. Applicant's Declaration :

(i) I declare that I am not a fulltime registered student at any University (except Open University of Sri Lanka) or any Higher Educational Institution under the Ministry of Higher Education.

(ii) I certify that all the particulars given by me in this Application are true and accurate. I am aware that if any particulars given by me in this Application are found to be false or inaccurate prior to my admission, my application will be rejected and that if such information is found to be false or inaccurate after my admission, I will be discontinued from the course.

(iii) In the event of my being selected for admission after the Test, I shall abide by the Statutes, By-Laws, Regulations and Rules of the Institute of Technology, University of Moratuwa, in so far as they are applicable to me.

(iv) I am aware that if I am found to be registered in another University (except Open University) or any other Higher Educational Institution under the Ministry of Higher Education for over 30 days at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

----,
Signature of Applicant.

Date :-----.

| Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here. |
|---|

4-715